நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 181 ஆங்கீரச வைகாசி 13 ( 26 05 1992 ) செவ்வாய்

● அஸாஜிதேரோ கருத்து

## புலிகள் மீதான தடை எரியும் நெருப்பில் எண்ணெய்

"பல உள்நாட்டு நிர்ப்பந்தங்கள் காரணமாகவே விடுதலைப்புலிகளை இந்தியா தடைசெய்தது இது சிறிலங்காவுக்கு உதவுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்ல இந்திய உதவிகளினாலேயே விடுதலைப் புலிகள் இயக்கம் ஓர் சக்தி வாய்ந்த அமைப்பாக உருவெடுத்துள்ளது" இவ்வாறு மாதம்பபே அஸாஜி தேரோ விடுத்த —04ஆம் பக்கம் பார்க்க

# தமிழ்நாட்டில் பஸ் குண்டுவெடிப்பு

# இருவர் பலி; 40 பேர் காயம்!

## இயந்திரக் கோளாறு என இந்திய செய்திகள் மறுப்பு

தமிழகத்தில் இரண்டு தினங்களில் இரண்டாவது குண்டு நேற்றும் வெடித்துள்ளது நேற்றைய குண்டு வெடிப்பு தனியார் பஸ் வண்டி ஒன்றில் நிகழ்ந்தது. இதனால் இருவர் பலியாகினர்; 40 பேர் காயமடைந்தனர் என பி. ரி. ஐ. செய்திகள் தெரிவித்தன.

காமராஜர் மாவட்டம் விருதுநகர் அருகே பஸ் சென்றுகொண்டிருந்த போது பஸ்ஸினுள் திடீரென குண்டு ஒன்று வெடித்தது. நெரிசலாக மக்கள் பயணம் செய்து கொண்டிருந்ததால் பல பயணிகள் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இக்குண்டு வெடிப்பிற்கு யார் காரணம் என்பது இதுவரை தெரியவரவில்லை என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

குண்டுவெடிப்பினால் பஸ் வண்டி முற்றாக நாசமானதாக மற்றுமோர் செய்தி தெரிவிக்கிறது.

இதனிடையே இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தை இந்திய செய்திகள் மறுத்துள்ளன. பஸ் வண்டியின் எஞ்ஜினில் ஏற்பட்ட தீ பொறியே இச்சம்பவத்திற்குக் காரணம் என இந்திய வானொலி தெரிவித்தது.

இயந்திரக் கோளாறினால் பஸ் சாரதி தனது கட்டுப்பாட்டை இழந்ததாகவும் இதனால் பஸ் அருகிலுள்ள வயலினுள் பாய்ந்து தீப்பற்றியது எனவும் இந்தியச் செய்திகள் குறிப்பிட்டன.

எனினும் இந்திய செய்தி ஏஜென்ஸியான பி. ரி. ஐ. தமிழ் நாடு பஸ் குண்டு வெடிப்பை ஊர்ஜிதம் செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### அஞ்சல் நிலையங்களுக்கு பாதுகாப்பு

தஞ்சாவூர் கும்பகோணம் பகுதி இந்திய தொலைக்காட்சி அஞ்சல் நிலையத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை தொடர்ந்து மாநிலத்திலுள்ள சகல தொலைக்காட்சி மற்றும் வானொலி அஞ்சல் நிலையங்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

### இந்தியா கோரிக்கை

புலிகளின் தலைவர் பிரபாகரனை நாடுகடத்தும்படி இந்தியா உத்தியோகபூர்வமாக ஸ்ரீலங்கா அரசிடம் கோரி கடிதம் எழுதியுள்ளது என இந்திய உள்துறை இணையமைச்சர் எம். பி. சவான் தெரிவித்துள்ளார்

## 8 காவலரண்கள், ட்ராக்டர் செட்டிகுளத்தில் தாக்கி அழிப்பு

செட்டிகுளம் நந்திரிமலை வீதியில் நேற்று முன்தினம் மாலை புலிகள் நடத்திய தாக்குதலில் 8 காவலரண்கள் தகர்க்கப்பட்டன படையினரின் ட்ராக்டர் ஒன்றும் அழிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை 3. 15 மணியளவில் இப்பகுதியில் உள்ள காவலரண்களுக்கிடையில் ட்ராக்டர் ஒன்றில் 20 படையினர் ரோந்து வந்து கொண்டிருந்தனர்

இவர்கள் மீது புலிகள் திடீரென அதிரடித்தாக்குதலை தொடுக்கவே படையினர் குதித்து தப்பியோடி அண்மையில் உள்ள காவலரண்களில் பாதுகாப்பிற்காக புகுந்து கொண்டனர்.

இக்காவலரண்கள் மீது தமது தாக்குதலை திருப்பிய புலிகள் 8 காவலரண்களை கைப்பற்றினர் படையினர் ரோந்து வந்த ட்ராக்டரையும் கைப்பற்றினர் இச் சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் பலியானார் ஏனையோர் தப்பியோடினர் இதில் 15 படையினர் காயமடைந்ததாக இந்திய வானொலி தெரிவித்தது.

புலிகள் தாம் கைப்பற்றிய காவலரண்களையும் படையினரின் ட்ராக்டரையும் தீமூட்டி — 04 ஆம் பக்கம் பார்க்க

### ஜூனில் சத்தகோசம ஆட்சேபனை சுதந்திரக்கட்சி திட்டம்

எதிர்வரும் ஜூன் பதினேழு அல்லது இருபத்து மூன்றாம் திகதி ஒரு "சத்தகோசம்" ஆக எதிர்ப்பு நடவடிக்கையை எதிர்க்கட்சிகள் குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரங்கேற்ற இருப்பதாகத் தெரிகிறது.

சிறிலங்காவுக்கு புதிதெனிலும் லத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளில் ஒரு சக்தி வாய்ந்த ஆட்சேபனை ஆயுதமாகப் பாவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்படி ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வீடுகளை ஊதியும், வாகன ஹோர்ன்களை ஒலித்தும், கோயில்கள் தேவாலயங்களின் மணிகளை அடித்தும், வீதிகளில் மறியல் செய்தும் மக்கள் இந்த ஆட்சேபனை நடவடிக்கையில் பங்கு கொள்வர்.

### நோகின்ற இடத்திலேயே தாக்க வேண்டும் - றிச்சாட்

சென்ற புதன்கிழமை பாராளுமன்றத்தில் அரசாங்கத் தரப்புக்கும் எதிர்க்கட்சிக்களுக்குமிடையே ஏற்பட்ட கருத்து மோதல்களையும் குழப்பத்தையும் தொடர்ந்து நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் இப்பிரச்சினைத் தீர்வுக்கான - 04 ஆம் பக்கம் பார்க்க

## பிரபாகரன் காவலில் இருந்தாலே இந்தியா ஒப்படைக்க கோரலாம்

"ஒரு நாட்டின் பிரஜையை இன்னொரு நாட்டுக்கு ஒப்படைப்பதற்கு இருநாடுகளுக்கிடையே ஒரு ஒப்பந்தம் இருத்தல் வேண்டும்

ஒப்பந்தம் இருந்து ஒப்படைப்புக்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படின் பிரபாகரனை ஒப்படைப்பதற்கான வலுவான காரணங்கள் உண்டாயின் சிறிலங்கா நீதிமன்றங்களே அதுபற்றித் தீர்மானிக்க வேண்டும்"

இவ்வாறு சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் ஐலண்ட் பத்திரிகை விமர்சகர் தரகியின் கேள்வியொன்றுக்குப் பதில் அளிக்கையில் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் ஒப்படைக்கக் கோரப்படுபவர் சட்ட ஒழுங்கு அமைப்புகளின் பாதுகாப்பில் இருந்தால் மட்டுமே இவ்வாறான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம் எனவே பிரபாகரன் காவலில் வைக்கப்பட்டிருந்தால் மட்டுமே இந்தியா இந்தக் கோரிக்கையை விடலாம் எவ்வாறாயினும் இவ்விடயத்தினை இறுதி அதிகாரம் நீதிமன்றத்திடமே உள்ளது சிறிலங்கா அரசிடம் அல்ல எனவும் திரு. பொன்னம்பலம் கூறினார்

திரு. பிரபாகரனைப் பிடிப்பதற்கு இந்தியாவின் சட்ட அமுலாக்க அமைப்புகள் மிக — 4 ஆம் பக்கம் பார்க்க

## அரிசிவிலை அதிகரிப்பைத் தடுக்க உணவுதிணைக்களம் நடவடிக்கை

நெல் சந்தைப்படுத்தும் சபைக்கான வங்கிக் கடன் வசதிகளை மத்திய வங்கி நிறுத்தியுள்ளதாலும் சிறுபோக விளைச்சல் குறைவாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாலும் அரிசியின் விலை அதிகரிக்கலாம் எனத் தெரிகிறது

இந்த சூழ்நிலையை பயாவித்து பதுக்கல் நடவடிக் —04 ஆம் பக்கம் பார்க்க

## 3 ஐ. தே. க. உறுப்பினர் இடைநிறுத்தம்

ஐ. தே. கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான கிறிநாத் குமாரசிங்காவும் மேல்மாகாணசபை உறுப்பினர்களான இங்கிரபால ஹேவவிதாரண நோபேட் பெரேரா ஆகிய மூவரும் அவர்களுக்கெதிரான ஒழுங்கு நடவடிக்கை விசாரணை முடியும்வரையும் கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாதென கட்சியின் கொழும்பு மாவட்டக்கிளை —04 ஆம் பக்கம் பார்க்க

## தீர்வை அடைய முற்படுகையில் இந்தியாவை அலட்சியப்படுத்த முடியாது

"சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகளுடன் சமாதானத் தீர்வை அடைய முற்படும் போது இந்தியாவை அலட்சியப்படுத்தப்படாது வடகிழக்கில் உள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இந்தியாவின் உதவிகளை சிறிலங்கா ஏற்றுக்கொண்டுள்ளதை மறந்துவிடக்கூடாது எங்கள் கொள்கையில் மாற்றம் இல்லை

இவ்வாறு சிறிலங்காவுக்கான இந்தியத்தூதுவர் என். என். ஜா சன்டே ஒப்சேவருக்கு அளித்த பேட்டியில் கூறினார்

ருஷ்யாவிடம் இருந்து றொக்கெற் வாங்கியமைக்காக அமெரிக்கா எடுத்த நடவடிக்கை பற்றிக் கேட்கப்பட்டபோது அமெரிக்காவிடமும் பிரான்ஸிடமும் றொக்கெற் கொள்வனவு செய்ய அணுகியதாகவும் விலை மிகவும் கூடுதலாக இருந்ததினால் வாங்குவதில்லையெனத் தீர்மானிக்கப்பட்டதாகக் கூறினார்

அவர்கள் விற்கமாட்டோம் எனக் கூறவில்லை அவர்கள் கூறிய விலை மிகவும் அதிகம் 1991இல் ருஷ்யா குறிப்பிட்ட விலை அமெரிக்காவினதும் பிரான்சினதும் விலையிலும் பார்க்க அரைவாசி ஆகும் என்றார்

றொக்கெற் கொள்வனவு சமாதான நடவடிக்கைகளுக்கே செய்யப்பட்டதென்பதை அமெரிக்கா உணர்ந்த — 4 ஆம் பக்கம் பார்க்க

## 6எதிரணி எம். பிக்களுக்கும் இரண்டு வருட சிறை?

பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளை மீறிய ஆறு எதிரணி எம். பிக்களுக்கும் இரண்டு வருட சிறைத்தண்டனையை பாராளுமன்றம் விதிக்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் இவர்கள் பாராளுமன்றத்தில் ...04 ஆம் பக்கம் பார்க்க

# நம்மவரின் பிரச்சினைதீரும் வரை அரசியலிலிருந்து ஒதுங்க மாட்டேன்

- தொண்டமான்

'மலையக மக்களின் பிரச்சினைகள் முழுமையாகத் தீரும் வரை நான் அரசியலிலிருந்தோ, தொழிற்சங்க நடவடிக்கைகளிலிருந்தோ ஒதுங்கப் போவதில்லை' இவ்வாறு இ.தொ.கா. தலைவரும் அமைச்சருமான தொண்டமான் தெரிவித்துள்ளார்.

'மலையக மக்களின் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. நான் தோட்டப் பகுதிகளுக்குவிஜயம் செய்யும் போது என்னிடம் கையளிக்கப்படாத மகஜர்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. இதிலிருந்து மலையக மக்களுக்கு இன்னும் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளது என்பதை நான் உணர்கின்றேன். இதனால் அரசியிலிருந்து விலகுவதென்ற எனது முடிவை நான் இப்போது மாற்றியுள்ளேன். இலங்கையின் இன்றைய அரசியல் நிலையை எடுத்துப் பார்க்கும் போது அரசியல், தொழிற் சங்க நடவடிக்கைகளில் தொடர்ந்தும் நான் ஈடுபடவேண்டியதன் தேவையை புரிந்து கொள்ள முடிகிறது. இதேவேளை மலையக மக்கள் எப்பிரச்சினை வந்தாலும் மலையகத்திலேயே தொடர்ந்தும் வாழ வேண்டுமென்ற உறுதிப்பாட்டைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும்' இவ்வாறு அமைச்சர் தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

# சம்பளம் ஒரு ரூபா; ஆயினும் செலவோ பல லட்சம்

இந்தியாவின் நிதிமந்திரியாக இருப்பவர் மன்மோகன் சிங். இவர் ஒரு பொருளாதார நிபுணர். முன்பு ரிசேர்வ் வங்கியின் கவர்னராக இருந்தவர். இவர் நிதி மந்திரிக்கு உரிய சம்பளத்தைப் பெறுவதில்லை. அரசாங்கத்தில் சம்பளம் பெறாமல் கௌரவ தொழிலாளியாக ஒருவரும் இருக்க இயலாது என்ற நியதியினால் இவர் சம்பளமாகப் பெயருக்கு ஒரு ரூபாய் மட்டும் பெறுகிறார்.

ஆனால் இவருக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பங்களாவைப் பாதுகாக்க அதனைச் சுற்றியுள்ள தோட்டத்தைப் பராமரிக்க இவரின் கார் சாரதிக்கு வேதனம் கொடுக்க மற்றும் பங்களாவில் வேலை செய்வோருக்கு சம்பளம் வழங்க என ஒவ்வொரு மாதமும் பல இலட்சம் ரூபாவை அரசாங்கம் செலவிடுகிறது. எனவே இவருக்கு உரிய சம்பளத்தை அரசு கொடுத்தால் அரசுக்கு இலாபமாக இருக்கும் என்று "பிளிட்ஸ்" என்ற பத்திரிகை கிண்டல் செய்துள்ளது. (16)

# மண்ணெண்ணை லொறியுடன் இரு எதிரிகளும் விடுதலை!

வடபகுதிக்குக் கொண்டு வரப்படும் வேளையில் மாகோவில் பொலிஸாரால் 90 பீப்பா மண்ணெண்ணையுடன் தடுத்து நிறுத்தப்பட்ட இரு லொறிகளையும் கைப்பற்றப்பட்ட எண்ணையுடன் அதன் உரிமையாளரிடம் திருப்பி ஒப்படைக்குமாறு கொழும்பு நீதிபதி செல்வி தென்னக்கோன் உத்தரவிட்டுள்ளார்.

இக் குற்றச்சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த லொறிச் சிப்பந்திகள் இருவரையும் விடுதலை செய்யுமாறும் அவர் பொலிஸாரைப் பணித்துள்ளார்.

பெற்றோலிய சட்டத்தின் கீழ் அன்றாடப் பாவனையில் உள்ள மண்ணெண்ணை போன்ற திரவ எரிபொருள்களைக் கொண்டுசெல்லலாம் என விதந்துரைக்கப்பட்டிருப்பதை நீதிபதி தனது தீர்ப்புக்கு ஆதாரமாகக் காட்டினார்.

# பெருந்தன்மை இல்லாமையே கேவலத்திற்கு காரணம்

-கலைஞர்

"அரசாங்கம் சிறியளவு பெருந்தன்மையைக் காட்டியிருந்தால் இன்று தோன்றியிருக்கும் கேவலமான நிலையைத் தவிர்த்திருக்கலாம். மக்களின் செல்வாக்குடன் பதவிக்கு வந்த எந்தவொரு கட்சியும் ஜெயலலிதா கட்சி போல இந்தளவு விரைவாக மக்களின் ஆதரவை இழக்கவோ, பத்திரிகைகளின் ஆத்திரத்தைச் சம்பாதிக்கவோ இல்லை"

இவ்வாறு தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி சென்னை எழும்பூரில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

'இந்து' ஆசிரியர் என். ராம் பேசுகையில் பத்திரிகையாளர்கள் தமக்கிடையிலான வேறுபாடுகளை மறந்து ஏதேச்சாதிகாரப் போக்குகளுக்கு எதிராகத் துணிந்து நிற்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

# தணுவின் தலைக்கு பொலிஸ் காவல்!

ராஜீவ் காந்தியை கொலை செய்ததாகக் கருதப்படும் தணு என்ற பெண்ணின் தலைக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இவரது தலையும் உடலின் பாகங்களும் சென்னை அரசாங்க மருத்துவமனையில் சவச்சாலையில் பதப்படுத்தப்பட்ட நிலையில் ஒரு வருடமாக வைக்கப்பட்டிருக்கின்றன.

மருத்துவமனை வாயிலில் துப்பாக்கியேந்திய பொலிஸார் காவலில் ஈடுபட்டுள்ளனர்.

# மட்டு- வாவியில் படகு கவிழ்ந்தது; பயணிகள் 11 பேர் பலி?

மட்டக்களப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் கடலில் ஒரு மீன்பிடிப்படகு கவிழ்ந்ததில் 11 பேர் மடிந்துவிட்டதாக அஞ்சப்படுகிறது.

சடலங்கள் தேடப்படுவதாகவும் இந்திய வானொலி தெரிவித்தது.

★ ராஜீவ் ஓர் 'இரத்தக்காட்டேரி'

# சிராத்த தினத்தன்று துண்டுப்பிரசுர வீச்சு!

ராஜீவ் காந்தியை 'பாசிஸவாதி' 'இரத்தக் காட்டேரி' எனக்குறிப்பிடும் பிரசுரங்கள் பலத்த பாதுகாப்புக்கும் மத்தியில் ராஜீவ் கொலைப்பட்ட ஸ்ரீ பெரும்புதூரில், அவரது சிரார்த்த தினம் அனுஷ்டிக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளை வீசப்பட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை ஸ்ரீ பெரும்புதூரில் ராஜீவின் சிரார்த்த தினம் அனுஷ்டிக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளை அங்கு போடப்பட்டிருந்த பாதுகாப்புக் காவலையும் மீறி நுழைந்த வெள்ளை நிற காரொன்றிலிருந்தே இத்துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ராஜீவ் காந்தியை கொன்றதாகக் கருதப்படும் தணுவை அத்துண்டுப் பிரசுரங்கள் புகழ்ந்துள்ளன.

தி. மு. க. தலைவர் கருணாநிதி பேட்டி

# விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஜெயலலிதாவும் ஆதரித்தே இருந்தார்

ராஜீவ் காந்தியின் மரணத்துக்கு முன்பு தி.மு.கவும் அ.தி.மு.கவும் விடுதலைப்புலிகளை ஆதரித்தன. 1991 சித்திரை மாதம் வரை ஜெயலலிதா பகிரங்கமாகவே விடுதலைப்புலிகளை ஆதரித்தார். இந்து பத்திரிகைக்கு 29-4-91 இல் அவர் அளித்த பேட்டியில் 'சிறிலங்கா தமிழர் அங்கு கௌரவமாகவும் மதிப்புடனும் பயம் இன்றி வாழவேண்டும். இனப்படுகொலை தடுத்து நிறுத்தப்படாவிடின் பங்களாதேஷில் இந்திரா காந்தி செய்தது போன்று இந்திய இராணுவ நடவடிக்கை எடுத்தால் தவறு இல்லையெனக் கருதுகிறேன்' எனக் கூறியிருந்தார். இவர் விடுதலைப்புலிகளை ஆதரித்தார் என்பதை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இவ்வாறு முன்னாள் தமிழக முதல்வர் மு. கருணாநிதி சண்டே பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

அப்பேட்டியில் அவர் மேலும்கருத்துத் தெரிவிக்கும் போது;

'தடா சட்டம் பஞ்சாப், காஷ்மீர் போன்ற கலவரங்கள் நிகழும் இடங்களுக்காக இயற்றப்பட்டது. அப்படியான நிலை தமிழ் நாட்டில் இல்லை. இருப்பினும் அரசியல் விரோதிகளை குறிப்பாக தி.மு.க வைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோரை கைது செய்வதற்காக தமிழ்நாட்டில் இச்சட்டத்தைப் பிரயோகித்துள்ளார். இது அரசியல் நோக்கம் கொண்ட செயல்.

நாகராஜனுடைய வாக்குமூலத்தைப் பொறுத்த மட்டில் அந்த வாக்குமூலம் கட்டாயப்படுத்தி வற்புறுத்தப்பட்டு பெறப்பட்டது. உண்மையைச் சொன்னால் அது அவருடைய வாக்குமூலம் அல்ல. பொலிஸாரின் வாக்குமூலமாகும். நாகராஜனின் பெயரில் அந்த வாக்குமூலம் எல்லா பொதுசனத்தொடர்பு சாதனங்களுக்கும் பொலிஸாரினால் வழங்கப்பட்டது. அந்த வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்ட சகல குற்றச்சாட்டுகளையும் அடுத்த நாள் காலையிலேயே நான் மறுத்தேன்.

எனது இருவருட ஆட்சியில் நான் விடுதலைப் புலிகளுக்கெதிராக ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றும் ஜெயலலிதாதான் அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதாக பொய்யான பிரசாரம் செய்யப்படுகிறது. ராஜீவ் காந்தி கொலையில் உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடித்துத் தண்டிக்க தி.மு.க. விரும்புகிறது. ஆனால் அப்பாவி மக்களைக் கைது செய்து சித்திரவதை செய்ய நாம் ஆர்வப்படவில்லை. சிறிலங்கா தமிழர் பிரச்சினையில் தி.மு.க. ஆதரவு காட்டினாலும் எமது கட்சியோ, அரசோ தீவிரவாதக் குழுக்கள் தமிழ் நாட்டின் அமைதிக்குக் குந்தகம் விளைவிக்க அனுமதிக்கவில்லை.

விடுதலைப்புலிகளும் மற்றக் குழுக்களும் 31 பயிற்சி முகாம்களை அமைப்பதற்கு இந்திராகாந்தி அரசு அனுமதித்தது.

இந்திராகாந்தியும், எம்.ஜி.ஆரும் அவர்களுக்கு ஆயுதம் வாங்குவதற்குப் பணம் கொடுத்தனர். அது மட்டும் இன்றிப் பயிற்சி முகாம்களும் அமைத்துக் கொடுத்தனர். 1985-86 இல் எம்.ஜி.ஆர் 4 கோடி ரூபா 2 காசோலைகள் மூலம் விடுதலைப்புலிகளுக்குக் கொடுத்தார்.

1989 இல ராஜீவ் பிரதமராக இருந்த போது விடுதலைப்புலிகளின் பிரதிநிதி சுப்பிரமணியம் மற்றும் இலகுடனும் பேசச் சொன்னார். முதலமைச்சர் என்ற முறையில அவர்களுடன் தொடர்பு கொள்ள முயன்றேன். ஆனால தொடர்புகொள்ள முடியவில்லை.

வடமிழக்கு மாகாண இடைக்கால சபையில வரதராஜப் பெருமாள் தலைமையில பங்குபற்ற விடுதலைப் புலிகளைக்கோரும்படி ராஜீவ் காந்தி சொன்னார். இவ்விடயம் பற்றி நானும் ராஜீவும் விவாதித்தோம். விடுதலைப் புலிகள் பெரும்பான்மையான ஆசனங்களைப் பெற வேண்டும் என்பதிலும் ஒத்துக் கொண்டோம். ஆனால் எமது முயற்சி தோல்வியடைந்தது.

எனது இரண்டு வருட ஆட்சிகாலத்தில் ராஜீவ்காந்தி பிரசாரத்துக்காக எட்டுத் தடவைகள் வந்தார். நாங்கள் அவருக்குத் தகுந்த பாதுகாப்பு அளித்தோம்.

தி.மு.க அரசு கலைக்கப்பட்டபின் புதிய கவர்னர் பீஷ்மன் நாராயண் சிங் பத்திரிகையாளருக்கு விடுத்த அறிக்கையில 'இப்போது தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் இல்லை. சட்டமும் ஒழுங்கும் சீராக உள்ளன' என்று சொன்னார். அதற்கு அடுத்த நாள் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார்.

'நீங்கள் கைது செய்யப்படலாம் என அஞ்சுகிறீர்களா' எனக் கருணாநிதியிடம் கேட்டபோது 'நான் 26 வயதில் முதல சிறைக்குச் சென்றேன். நான் இதுவரை 20 தடவைகள் கைது செய்யப்பட்டுள்ளேன். நான் கைது செய்யப்படுவதுபற்றிக் கவலைப்படவில்லை என்றார்.

# அம்பாறையில் மட்டும் 30937 தமிழர் அகதிகளாக!

அம்பாறை மாவட்டத்தில் படையினரினதும் முஸ்லிம் ஊர்காவல்படையினரினதும் துன்புறுத்துதல்களை அடுத்து 30937 தமிழர்கள் தற்பொழுது அகதிகளாக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து நேற்றுக் கிடைத்த செய்தியொன்று தெரிவிக்கிறது.

இவர்களில் 5120 குடும்பங்களைச் சேர்ந்த 20490 பேர் அகதிமுகாம்களில் தங்கியுள்ளனர். மிகுதி 2007 குடும்பங்களைச் சேர்ந்த 10447 பேர் முகாம்களுக்கு வெளியேயும் அகதிகளாகத் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு முகாம்களில் போதிய அடிப்படை வசதிகளோ, உணவு விநியோகமோ வழங்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கொள்ளையடித்த சிப்பாய் சிக்கினார்

கண்டி-கட்டுகஸ்தோட்டையில் ஆயுத முனையில் தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக டபிள்யூ சில்வா என்ற இராணுவச் சிப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுமார் 31 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை அதிகரிக்கும்

உள்ளூராட்சித் திணைக்களத்தால சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்பட்டுவரும் நன்கொடைப்பணம் அடுத்த வருடம் முதல் அதிகரிக்கப் படவுள்ளது.

சனசமூக நிலையங்களின் நன்கொடைப்பணம் 'ஏ' தர சனசமூக நிலையத்திற்கு 1500/= ரூபாவும் 'பீ' தர சனசமூக நிலையத்திற்கு 1000/= ரூபாவும் அதிகரிக்கப்படவுள்ளன. (11)

